1975 நவம்பர் 12]

முடிவுசெய்து, மாவட்ட வாரியாகக் கேட்டு, பின்னால் மத்திய சர்க்காருக்கு இந்த அரசாங்கத்தின் சார்பில், நாங்கள் இவ்வாறு பரிசீலித்தோம், அப்படிப்பட்ட பாண்டெட் லேபர் இல்லை என்று தெரிய வருகிறது என்றுகூட எழுதி அனுப்பியிருக்கிறோம்.

தொழிலில் அமர்த்தப்படுவதற்கான குறைந்த அளவு வயது

* 322. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாக்டரி சட்டத்தின்கீழ் வேலை பெறுவதற்கான குறைந்தபட்ச வயதை 16 ஆக உயர்த்தக் கோரி மத்திய அரசுக்கு மாநில அரசு அண்மையில் கோரிக்கை ஏதேனும் விடுத்துள்ளதா ?

(இ) ஆமெனில், மத்திய அரசு அளித்த பதில் யாது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் வேலையில் அமர்த்தப்படுவதற்கான குறைந்த அளவு வயதை 14-லிருந்து 16-ஆக உயர்த்துவது விரும்பத்தக்கதல்ல என்று மத்திய அரசு மாநில அரசுக்குத் தெரிவித்துள்ளது. இதற்குக் காரணமாக இத்தகைய நடவடிக்கையால் பிற வேலைவாய்ப்புத் துறைகளிலும் பாதகமான விளைவுகள் ஏற்படக்கூடும் என்றும் மேலும், பெரும்பாலான மாநிலங்களிலும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளிலும் கல்லூரிப் புகுமுக வகுப்புவரை இலவசக் கல்வி வசதிகள் இல்லை என்பதையும் மத்திய அரசு சுட்டிக் காட்டியுள்ளது.

அரசு தொழிலாளர் காப்புறுதித் திட்ட மருத்துவ மனைகள்

* 323. வினா—திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் நகரில் உள்ள E.S.I. மருத்துவ மனைக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.